# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க,
## தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்

---

*[1991 ஏப்பிறல் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1991, ஏப்பிறல் மாதம் 19 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை : ரூபா 1.50* *தபாற் செல்வு : 1.55*

# 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம்.

[1991, ஏப்பிறல் மாதம் 19 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 109/90

**தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

## பாகம் I

### தேசிய கல்வி ஆணைக்குழுவைத் தாபித்தல்.

2. (1) சனாதிபதியானவர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய காலத்துக்குக்காலம் தேசிய கல்விக் கொள்கையை வெளிப்படுத்தலாம். இது, அதன் எல்லா அம்சங்களினாலும் கல்விக்குப்பொறுப்பாயுள்ள எல்லா அதிகாரிகளாலும் நிறுவனங்களாலும் இணங்கியொழுகப்படுதல் வேண்டும். **சனாதிபதி தேசிய கல்விக் கொள் கையை வெளிப் படுத்துதல்.**

(2) தேசிய கல்விக்கொள்கை பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது:—

கல்வியின் குறிக்கோள்களும் இலக்குகளும்; கல்விசார் முறைமையின் அமைப்பு - பாலர் பாடசாலை, ஆரம்பம், இரண்டாந்தரம், மூன்றாம் நிலை, உயர்நிலை, முறைசார்ந்தது, முறைசாராதது, வளர்ந்தோர், சிறப்பு, உயர்தொழில் சார்ந்தது, மதம் சார்ந்தது, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குமான முறைகளும் மூலப்பிரமாணமும் உட்பட கல்வி நிறுவனங்களின் தாபிதம், அமைவிடம், பகிர்ந்தளிப்பு, போதனாமொழி உட்பட கல்வியின் உள்ளடக்கம், பாடவிதானத்தின் பரவலாக்கம், பாடநூல்களும் படித்தற் பொருட்களும், சமய அறிவின் இடம், அனுஷ்டானமும் வழிபடலும், மதிப்பீடும் கணிப்பும், பரீட்சை முறைமை, சான்றிதழ்கள், டிப்புளோமாக்கள், கல்விசார் அளிப்புகள், தகைமைகளின் அங்கீகாரமும்; ஆசிரியர்கள், துணைக்கல்வி ஆளணியினர், மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள் உட்பட கல்விச்சேவை ஆளணியினரின் ஆட்சேர்ப்பு, அமர்த்துதல், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு; அத்துடன் உயர்தொழில் வளர்ச்சி; சமுதாயப் பங்கேற்பை செயற்படுத்துதல் உட்பட கல்விக்கான வளங்கள்; அத்துடன் மதிய உணவு சுகாதார, பல்வைத்திய சேவைகள், உடற்கூறு சார்ந்த கல்வி, விளையாட்டுத்துறைகள் உட்பட கல்விக்கான துணைநிலைச் சேவைகள்;

(3) தேசிய கல்விக் கொள்கையானது, 3ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவால் சனாதிபதிக்குச் செய்யப்பட்ட விதப்புரைகளையும் மதிப்புரைகளையும் கருத்திற்கொண்டு தொகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

தேசிய கல்வி ஆணைக் குழுவைத் தாபித்தல்.

3. (1) தேசிய கல்வி ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

ஆணைக் குழுவின் அமைப்பு.

4. (1) ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்;

(ஆ) 1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர்;

(இ) கல்வி, உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(ஈ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(உ) மாகாண சபைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்,

(ஊ) கல்வி, நிர்வாக அல்லது முகாமைத்துவத்துறையில் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள அல்லது ஏதேனும் உயர்தொழிலில் திறமை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டிய வேறு பத்து உறுப்பினர்கள். 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தவிசாளர், துணைத்தவிசாளர் (கொள்கை) அத்துடன் துணைத்தவிசாளர் (திட்டமிடல்) ஆணைக்குழுவிற்கு முழு நேரம் வேலை செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாண சபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராக வந்தால் அவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் உறுப்பினரொருவராக இருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட ஒரு கடிதத்தின்மூலம் பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவி துறப்பு, சனாதிபதியால் அது ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதல் வேண்டும்.

(4) சனாதிபதி, ஆணைக்குழுவின் நியமன உறுப்பினர் எவரையும் குறித்தொதுக்கப்பட்ட காரணத்திற்காக பதவியினின்று அகற்றலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ), (ஊ) என்னும் பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நியமன உறுப்பினரொருவரின் பதவிக்காலம், ஐந்தாண்டுகளாதல் வேண்டும்:

ஆயினும், ஆணைக்குழுவின் அத்தகைய எவரேனும் உறுப்பினரின் பதவியில் வெற்றிடமொன்று நிரப்புவதற்கென சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், எந்த உறுப்பினரை அவர் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ), (ஊ) என்னும் பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, சனாதிபதியானவர், அவர் எந்தப் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டாரோ அந்தப் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அந்த உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆளொருவரை நியமிக்கலாம்.

(7) ஓராம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், எப்பதவியை வகிக்கின்ற காரணத்தினால் அவர் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ, அப்பதவியை அவர் வகிக்கும்வரைக்கும் பதவி வகித்தல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியமானது, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவரின் பதவிக்காலத்தின்போது குறைக்கப்படுதலும் ஆகாது.

(9) ஓராம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ), (ஊ) என்னும் பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்டு காலக்கழிவினால் பதவியை வறிதாக்குகின்ற ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(10) ஆணைக்குழுவின் செயல் அல்லது முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களுக்கிடையில் வெற்றிடமொன்று இருப்பதனால் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதனால் மாத்திரம் செல்லுப்படியற்றதெனக் கருதப்படலாகாது.

ஆணைக்குழுவின் தவிசாளரும் துணைத் தவிசாளரும்.

5. (1) சனாதிபதியானவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து ஆணைக்குழுவின் தவிசாளர் ஒருவரையும் துணைத்தவிசாளர் ஒருவரையும் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது துணைத்தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் தவிசாளரின் அல்லது துணைத்தவிசாளரின் பதவியினின்று விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகல் சனாதிபதியால் அது ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, தவிசாளரை அல்லது துணைத்தவிசாளரை, குறித்தொதுக்கப்பட்ட காரணத்திற்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) இரண்டாம், (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரின் பதவிக்காலம், ஆணைக்குழுவின் அவரது உறுப்பாண்மைக் காலப் பகுதியாதல் வேண்டும் என்பதுடன் துணைத்தவிசாளரின் பதவிக்காலம் ஆணைக்குழுவின் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது துணைத்தவிசாளர் சுகவீனம் காரணமாக, அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென சனாதிபதியானவர் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்.

6. (1) ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதவிடத்து, அத்தகைய கூட்டத்துக்கு உதவித் தவிசாளர் எவரும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளரும் உதவித்தவிசாளரும் வருகைதராவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அவர்களுள்ளிருந்து தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவினது ஏதேனும் கூட்டத்தில் கூட்ட நடப்பெண் எட்டாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் ஏதேனும் முடிபொன்றுக்காக எழுகின்ற வினா எதுவும் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும். வாக்குகள் சமனாக இருக்கும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குகின்ற தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு தமது வாக்குடன் சேர்ந்து அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழு, அதன் கூட்டங்கள் தொடர்பிலும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளல் தொடர்பிலும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

ஆணைக்குழுவின் இலச்சினை.

7.(1) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றஞ்செய்யப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களினதும் செயலாளரினதும் முன்னிலையிலல்லாது ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், இவர்களனைவரும் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

## பாகம் II

### ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும்

ஆணைக்குழுவின் பணிகள்.

8. (1) ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) கல்விக்கொள்கை; அத்துடன் திட்டம் அல்லது திட்டங்கள் ஆகியவற்றை உடனடியாக மீளாய்வு செய்தல்; அத்துடன் விரிவான தேசிய கல்விக் கொள்கை ஒன்றின் மீது சனாதிபதிக்கு விதப்புரைகள் செய்தல் என்பன உட்பட கல்விக் கொள்கையில் தொடர்ச்சி நிலை பெறுவதை உறுதிசெய்வது; அத்துடன் சமுதாயத்தில் மாறிவரும் தேவைகளைச் சமாளிப்பதற்குக் கல்வி முறையை இயலச்செய்வது என்பவற்றைக் கருத்திற் கொண்டு, கல்விக் கொள்கையின் எல்லா அம்சங்களிலும் சனாதிபதிக்கு விதப்புரைகள் செய்தலும்;

(ஆ) நடைமுறையிலிருக்கும் தேசிய கல்விக் கொள்கையை, அத்துடன் திட்டத்தை அல்லது திட்டங்களைக் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து பகுப்பாய்வுசெய்தலும்; அத்துடன் அவசியமானவிடத்து, அத்தகைய கொள்கையில், திட்டத்தில் அல்லது திட்டங்களில் மாற்றங்கள்பற்றி சனாதிபதிக்கு விதப்புரை செய்தலும்;

(இ) அதன் ஆலோசனைக்காக, சனாதிபதியினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய கல்வி தொடர்பான வேறு ஏதேனும் விடயம் மீது சனாதிபதிக்கு ஆலோசனை வழங்குதலும்.

(2) ஓராம் பிரிவின் கீழ், எந்தக் கருமங்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் விதப்புரைகள் செய்யப்படலாமோ, அந்தக் கருமங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஆணைக்குழு, பின்வரும் கருமங்கள் மீது சனாதிபதிக்கு விதப்புரைகளைச் செய்யலாம் :—

(அ) கல்வி நிறுவனங்களில் பாடவிதானம் மற்றும் போதனா முறைகளில், தொழில், கைத்தொழில் மற்றும் சமூகத் தேவைகள் என்பவற்றுடன் கல்வி ஒத்திசைந்திருப்பதற்கு அவசியமான மாற்றங்கள்;

(அ) கல்வி நிறுவனங்களில், மாணவர்களுக்கு அவர்களது ஆக்கத் திறனை அவர்கள் முழுமையாக அபிவிருத்தி செய்வதனை இயலச் செய்வதற்கு வழிகாட்டுதல், ஆலோசனை வழங்குதல் என்பவற்றின் நிறைவு;

(இ) கல்வி நிறுவனங்களுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான இணைப்புகளை வலிமையுறச் செய்வதற்கு அவசியமான வழிமுறைகள்;

(ஈ) கல்வி நிறுவனங்களை, சமுதாயத்தில் முழுமொத்த மானிட அபிவிருத்திக்கான மூலவள நடுநிலையங்களாக அபிவிருத்தி செய்தல்;

(உ) பாடசாலைகளுக்கிடையே இடப்பரப்பு ரீதியிலான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு அவசியமான வழிமுறைகள்;

(ஊ) ஆசிரியர்களினதும் கல்விச்சேவை ஆளணியினரதும் உயர் தொழில்சார் நிலைப்பாட்டை மேம்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகள்;

(எ) ஆரம்பப் பாடசாலைகளையும் இண்டாந்தரப் பாடசாலைகளையும் குறைபருவத்திலேயே விட்டு விலகும் பிள்ளைகளின் நன்மை கருதி, அவர்களது ஆக்கத்திறனை அவர்கள் முழுமையாக அபிவிருத்தி செய்வதனை இயலச் செய்வதற்கென ஏற்பாடு செய்யப்படக்கூடிய மாற்று நிகழ்ச்சித் திட்டங்கள்;

(ஏ) பாடவிதானங்களின் எல்லாச் சமுதாயங்களையும் மதங்களையும் சேர்ந்த மாணவர்களின் பண்பாட்டு மற்றும் சமய அபிலாசைகளைப் பேணி வளர்ப்பதற்கு அவசியமான மாற்றங்கள்;

(ஐ) அத்தகைய எவையேனும் விதப்புரைகளைப் பயனுறுவதற்கு அவசியமான சட்டவாக்க மாற்றங்கள்.

**அமைச்சரின் தத்துவங்கள் பாதிக்கப்பட மாட்டாது.**

9. இரண்டாம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட தேசியக் கல்விக் கொள்கைக்கு அமைவாக, இச்சட்டத்திலுள்ள எதுவும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் கல்வி தொடர்பிலான ஏதேனும் விடயத்திற்கு அல்லது பணிக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் 8ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீதிலான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் பகிரங்க அலுவலர் ஒருவரால் பிரயோகிக்கப்படற்பாலனவான தத்துவங்களைப் பாதித்தலோ அல்லது பங்கப்படுத்துதலோ அல்லது பாதிப்பதாக அல்லது பங்கப்படுத்துவதாகக் கருதப்படுதலோ ஆகாது.

**ஆணைக்குழுவின் தத்துவங்கள்.**

10. (1) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :—

(அ) 8 ஆம் பிரிவின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக —

(i) அவசியமாகக்கூடியவாறான அத்தகைய மதிப்பீடுகளையும் நுண்ணாய்வுகளையும். கற்கைகளையும், ஆராய்ச்சியையும் கொண்டு நடாத்துதல்;

(ii) நிபுணர்களினதும் உயர் தொழிலாளர்களினதும் அல்லது பொது மக்களினதும் கருத்துக்களைக் கண்டறியும் நோக்கத்துக்காக பகிரங்க, அல்லது தனியார் விசாரணைகளை நடாத்துதல்;

(iii) சனாதிபதியால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப் படுமிடத்து, அதற்கிணங்க கல்வித் திட்டங்களைத் தயாரித்தல்;

(iv) கல்வியில் தூர நோக்குடன் திட்டமிடலில் துணைபுரிதலும் இயைபுபடுத்தலும்;

(ஆ) ஆணைக்குழுவின் பணிகளையொத்த பணிகளைப் புரிகின்ற இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்கமைப்புகளுடன் இணைப்பைத் தாபித்தலும் பேணுதலும்;

(இ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக்கணக்குகளை ஆரம்பித்தலும் பேணுதலும்;

(ஈ) இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும் புரிதலும்;

(உ) இலங்கையிலாயினுஞ்சரி வெளிநாடுகளிலாயினுஞ்சரி, ஆராய்ச்சி நிறுவனங்களினால் அல்லது தனியாட்களினால் கல்விசார்ந்த ஆராய்ச்சிக்கு ஒழுங்குசெய்தலும் அதனை நடாத்துதலும்;

(ஊ) இலங்கையிலும் வேறு நாடுகளிலும் கல்வி, மற்றும் கல்வி சார்புடைய துறைகள் மீது தகவல் தரவு வங்கியொன்றைத் தாபித்தலும் பேணுதலும்;

(எ) அசைவுள்ளவையும் அசைவற்றவையுமான மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதலும் **பெற்றுக்** கொள்ளுதலும்;

(ஏ) வெவ்வேறு கல்வித்துறைகளில் நிபுணத்துவக் குழாமொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் திறமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்;

(ஐ) அதன் பணிகளைத் தகுந்தவாறு நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய குழுக்களையும், நிபுணத்துவத் தொகுதிகளையும் மதியுரைக் குழுமங்களையும் நியமித்தல்; அத்துடன்

(ஒ) அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இடைநேர்விளைவான அல்லது விளைவாந் தன்மையிலான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது வேறு விடயங்களையும் செய்தல்.

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளையும், புலனாய்வுகளையும், கற்கைகளையும் ஆராய்ச்சிகளையும் கொண்டுநடாத்துவதற்கான உள்ளகக் கட்டமைப்பு வசதிகளையும் இயன்றளவு பயன்படுத்துதல் வேண்டும். சனாதிபதியின் பணிப்பின் மீது தவிர மேலதிக உள்ளக கட்டமைப்பு எதுவும் அல்லது புதிய வசதிகள் எவையும் அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவுக்கு ஏற்பாடு செய்யப்படுதலாகாது.

## பாகம் III

### ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

பிரதம நிறைவேற்றுவலர்.

11. (1) தவிசாளரே ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்றுவலராதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, இவ்வுட்பிரிவால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தைத் தவிர இச்சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, தீர்மானத்தின் மூலம் தவிசாளருக்குக் கையளிக்கலாம் என்பதுடன் தவிசாளர், அவருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணைக்குழுவின் பொதுவான அல்லது சிறப்புப் பணிப்பிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(3) தவிசாளர் தாம் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்றுவலராயிருக்கின்றார் என்பது எவ்வாறிருப்பினும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக இல்லாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். செயலாளர் ஆணைக்குழுவின் அலுவல்களின் நாளாந்த நிருவாகத்துக்குப் பொறுப்புடையவராகவிருத்தல் வேண்டும்.

(4) சனாதிபதியால் நியமிக்கப்படும் செயலாளர் ஒருவர் ஆணைக்குழுவுக்கு இருத்தல் வேண்டும். செயலாளர் ஆணைக்குழுக் கூட்டங்களின் கூட்டறிக்கையின் பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டங்களில் பேசுவதற்குரித்துடையவராதலும் வேண்டும்; ஆனால் அதில் வாக்களிக்கும் உரித்துடையவராதலாகாது.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியின் நியமனம் முதலியன.

12. (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக —

(அ) அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமானவர்கள் என அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை நீக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தின் வீதத்தை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களின் அல்லது சேவையாளர்களின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஈ) அத்தகைய அலுவலர்களின் அல்லது சேவையாளர்களின் நன்மைக்காக ஒரு சகாய நிதியத்தை அல்லது திட்டத்தை தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் ஏதேனும் அத்தகைய நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

(2) ஆணைக்குழு, ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்கள் முதலானோரை நியமித்தல்.

13. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரின் சம்மதத்துடனும் அத்துடன் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும் அது போன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்து சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்து சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து அவ்வொப்பந்தத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவைபுரிய உடன்பட்டுள்ள எவரேனும் ஆள் ஆணைக்குழுவால் தொழிலுக்கமர்த்தப்படுமிடத்து அவ்வாளினால் ஆணைக்குழுவுக்கு ஆற்றிய ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றிய சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அந்த அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன் அதே போன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது ஆணைக்குழுவாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலராலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான, ஓய்வூதியம், சகாயநிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட அத்தகைய நிபந்தனைகள்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(7) இப்பிரிவில் "உயர்கல்வி நிறுவனம்" என்பதும் "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பதும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

இரகசியம் பற்றிய வெளிப்படுத்துகை.

14. ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் அத்துடன் ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அவர்களது கடமைகளை ஏற்குமுன்னர், ஆணைக்குழுவின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கண்டிப்பான இரகசியத்தை அனுசரிப்பதற்குத் தம்மைப் பிணிப்பதாக வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அவரது பணிகளைப் புரிகையில் அவரறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் விடயங்களை -

(அ) வெளிப்படுத்துமாறு நீதிமன்றமொன்றில் தேவைப்படுத்தப்பட்டபோது; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றுடன் இணங்கியொழுகுவதற்காக,

தவிர அவற்றை வெளியிடாதிருப்பதாக அத்தகைய வெளிப்படுத்துகையினால் தம்மை பிணித்து வாக்குறுதி அளித்தலும் வேண்டும்.

விவரத்திரட்டுகளும் தகவலும்.

15. (1) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதனையும் புரிவதனையும் இயலச் செய்யும் நோக்கத்திற்காக ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தலின் மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப் பகுதிக்குள் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விவரத் திரட்டுக்களையும் தகவலையும் ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கும் கொடுத்துதவுமாறு அல்லது ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ள ஏதேனும் விளக்கத்தில் சமுகமாயிருக்குமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் விவரத் திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ள ஏதேனும் விளக்கத்தில் சமுகமாயிருக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய விவரத் திரட்டுகளை அல்லது தகவலை கொடுத்துதவுவதிலிருந்து தடைசெய்யப்பட்டிருக்குமிடத்தன்றி, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகையில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டொன்றில் அடங்கியுள்ள தகவலெதுவும் அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுகின்ற ஆளின் சம்மதத்துடனன்றி அல்லது ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும் நெறிமுறையின்போதன்றி ஆணைக்குழுவால் வெளியிடப்படுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

(4) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் விளக்கத்தில் சான்று அளிப்பவரான ஒவ்வோர் ஆளும், அத்தகைய சான்று தொடர்பில், நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் சான்று அளிக்கின்றவரான சாட்சி ஒருவருக்கு அத்தகைய நீதிமன்றம் முன்னரான சான்று தொடர்பில் உரித்துடையவையான எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராகுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும், பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

16. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக் கோவையின் கருத்துக்குட்படவும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

17. ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

தவறுகள்.

18. (1) (அ) பதினைந்தாம் பிரிவின் கீழ் தமக்கனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(ஆ) பதினைந்தாம் பிரிவின் கீழ் தமக்கனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது தகவலில் தெரிந்திருந்தும் ஏதேனும் பொய்யான அல்லது பிழையான கூற்றைச் செய்கின்ற;

(இ) ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையில் தெரிந்துகொண்டு பொய்யான அல்லது திருத்தமற்ற கூற்றைச் செய்கின்ற;

(ஈ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருந்துகொண்டு, இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிக்கையில் அல்லது புரிகையில் அல்லது அதன் தொடர்பில் அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, இச்சட்டத்தின் கீழ் எந்த நோக்கத்திற்காக அத்தகைய தகவலை வெளியிடுவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந் நோக்கத்தைத் தவிர வேறு ஏதேனும் நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளியிடுகின்ற,

ஒவ்வோராளும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோராளும் நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது—

(அ) அந்த ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழு கழகமொன்றாயின் அக்கழகத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய கழகத்தின் பங்காளர், அவரது அறிவுக்கு எட்டாமலேயே அத்தகைய தவறு புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பயன்படுத்தினாரென எண்பிப்பாராயின், அவர் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மீது எடுக்கப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

19. தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் :—

(அ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் ஆணைக்குழுவுக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரால் அல்லது அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக,

அமைதல் ஆகாது.

20. ஆணைக்குழுவானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஏனைய வற்றுடன் அவ்வாண்டின்போது அதனால் செய்யப்பட்ட எவையேனும் விதப்புரைகள் அடங்கிய அறிக்கையொன்றை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆண்டறிக்கை.

21. ஆணைக்குழு, இச்சட்டத்தால் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாவற்றின் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம். விதிகள்.

22. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் கொண்டு நடாத்தும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒழுங்குவிதிகளையும் ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்ட தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

23. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி— பொருள் கோடல்.

"தவிசாளர்" என்பது ஆணைக்குழுவின் தவிசாளர் என்று பொருள்படும்;

"கல்வி" என்பது பாலர்பாடசாலைக் கல்வி, ஆரம்ப இரண்டாந்தர மட்டங்களில் முறைசார்ந்த பள்ளிப்படிப்பு, மூன்றும் நிலைக் கல்வி, உயர் கல்வி, கமத்தொழில்சார் கல்வியும், பயிற்சியும், திறமை அபிவிருத்திக்கான பயிற்சி, முறைசார்ந்த, முறைசாராத மற்றும் முதியோர் கல்வி, சிறப்புக் கல்வி, உயர்தொழிற் கல்வியும், தொழில், மற்றும் தொழினுட்பக் கல்வியும் பயிற்சியும் அத்துடன் சமயக் கல்வி என்பவற்றையும் உள்ளடக்கும்;

"கல்வி நிறுவனம்" என்பது கல்வியறிவை வழங்கும் ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது மாநகரசபை, நகரசபை, அல்லது பிரதேச சபை என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையால் அல்லது பிரதேச சபையால் பிரயோகிக்கப்படும், நிறைவேற்றப்படும் அல்லது புரியப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்தால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை என்று பொருள்படும்; அத்துடன்

"செயலாளர்" என்பது ஆணைக்குழுவின் செயலாளர் என்று பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

24. இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.